Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.1030/2025

**Depositions of PW- 2**

| Name | திரு.பாரதிராஜா | Occupation | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of May 2026.

15.05.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் உட்கோட்டம் பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.05.2025 அன்று மம்சாபுரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை 09.00 மணிக்கு நானும், முதல்நிலை காவலர் 1309 சகாதேவன் மற்றும் முதல்நிலை காவலர் 3275 ராமச்சந்திரன் ஆகிய போலீஸ்பார்ட்டி சகிதம் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு குற்றம் சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது அழகு மகன் செல்வராஜ் வயது 25 டெப்பை கணபதி நாடார்தெரு மம்சாபுரம் என்பவர் 10.15 மணிக்கு கருக்கு தோப்பு பகுதியில் ஒரு பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கிக்கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை சோனை செய்தபோது அதில் சுமார் 3 லிட்டர் புளித்த வாடையுடன் கூடிய அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இருந்தது தெரியவந்தது. மேற்படி குற்றத்திற்கு எதிரி செல்வராஜ்ஜை கைது செய்தும் குடத்துடன் பனங்கள்ளை சம்பவயிடத்தில் அழித்தும் சம்பவயிடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே அத்தாட்சி தயார் செய்து 11.15 மணிக்கு நிலையம் கொண்டுவந்து குற்ற எண்.99/2025 பிரிவு.4(1)(C) TNP

Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்று 11.15 மணிக்கு இவ்வழக்கில் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் முதல்நிலை காவலர் 1309 சகாதேவன் மற்றும் முதல்நிலை காவலர் 3275 ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மீது அரசு அனுமதியின்றி பனங்கள் இறக்கிய குற்றத்திற்கு 11.05.2025 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கில் ரோந்து பணிக்கு காவல்நிலையத்திலிருந்து 09.00 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான். மேற்படி கருக்கு தோப்பு பண்ணையானது எங்கள் காவல்நிலையத்திலிருந்து மேற்கே 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி பண்ணைக்கு காவல்நிலையத்திலிருந்து செல்வதற்கு பொதுவாக அரைமணிநேரம் ஆகும். நாங்கள் ரோந்து சென்றதால் 2 மணிநேரம் ஆனது. கருக்கு தோப்பு பண்ணையை சுற்றி சுமார் 1000 க்கும் மேல் பனை மரங்கள் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி கருக்கு தோப்பு பண்ணையில் சுமார் 15 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

இவ்வழக்கின் எதிரி எந்த பனைமரத்தில் ஏறினார் என்பதை குறிப்பிட்டு வரைபடம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி பனைமரத்தில் ஏறி கள் இறக்கியிருந்தால் வரைபடம் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்தபோது ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பனைமரமானது யாருக்கு சொந்தமானது என்பது பற்றி நாங்கள் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அது ஆண்டாள் கோவிலுக்கு பாத்தியப்பட்ட பனைமரமாகும். மேற்படி பனைமரமானது ஆண்டாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் அரசுக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. பதநீரானது நேரம் கடந்துவிட்டால் புளித்த வாடை அடிக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்கான சிறப்பு பயிற்சிகள் எதுவும் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பனங்கள்ளை கைப்பற்றி நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இடத்தில் சுமார் 15 குடும்பங்கள் வசித்து வந்தபோதிலும் அவர்கள் யாரிடமும் சாட்சியாக அத்தாட்சியில் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சம்பவயிடத்தில் அவர்கள் யாரும்

இல்லாததால் தனிப்பட்ட சாட்சிகளிடம் கையெழுத்து பெறப்படவில்லை. மேற்படி எதிரி பணங்கள் இறக்கியதாக கூறப்படும் இடத்தின் உரிமையாளர் யாரும் எங்களிடம் எதிரி மீது புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை சோதனை செய்வதற்கு முன் எதிரியிடமோ அல்லது நீதிமன்றத்திலோ அனுமதி கடிதம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பணங்கள்ளின் மாதிரிகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கள்ளை கீழே கொட்டி அழித்தபோதும் குடத்தை உடைத்தபோதும் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி குடத்தை உடைப்பதற்கும் கள்ளை அழிப்பதற்கும் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றாலும் காவல் ஆய்வாளருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியை சோதனை செய்து அவரை கைது செய்வதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டோம் என்றால் சுமார் 30 நிமிடங்கள் ஆனது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழித்ததற்கான அழித்தல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை ஒரே நாளில் தயார்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையை உடனடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் காலதாமதமாகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரி மீது புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரியிடமிருந்து பணங்கள்ளை கைப்பற்றியிருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.